**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 327/2025**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 20.11.2025.**

| | |
|---|---|
| **Name : தனசேகரன்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் பொட்டனேரியில் குடியிருந்து JSW வேலை செய்கிறேன். எனக்கும் எதிரிக்கும் இடையே காம்போன்டு கட்டுவது சம்மந்தமாக சுமார் 2 வருடங்களாக பிரச்சனை நடந்தது. கடந்த 30.10.2022 ம் தேதி மாலை 3 மணியளவில் எதிரி என் காம்போன்டு சுவர் அருகே கடப்பாறையை வைத்து குழிதோண்டிக் கொண்டிருந்தார். என் மனைவி சென்று எதற்காக குழி தோண்டுகிறாய் என்று கேட்டதற்கு அப்படி தான் தோண்டுவேன் தெவிடியா கண்டார ஒலி என்று கெட்ட வார்த்தையால் திட்டி கடப்பாறையால் நெஞ்சின் மீது வைத்து கீழே தள்ளிவிட்டார்.

2) நான் சென்று எதிரியிடம் கேட்ட போது அவர் வைத்திருந்த கடப்பாறையால் வயிற்றின் மீது அடித்து கீழே தள்ளினார் அதில் எனக்கு வலிப்பு வந்துவிட்டது. அதன் பிறகு என்னை மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலம் என் மனைவி என்னை அழைத்து சென்றார். எதிரி அவர் வைத்திருந்த கடப்பாறையை காட்டி இன்றைக்கு நீ தப்பித்துக் கொண்டாய் என்றைக்கு இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று என்னையும், என் மனைவியையும் கொலை மிரட்டல் விடுத்தார்.

3) எதிரி என் மனைவியை அடித்ததில் என் மனைவிக்கு கழுத்து, இடுப்பு மற்றும் பின் தலையில் அடிப்பட்டது. நாங்கள் இருவரும் மேட்டூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தோம். மருத்துவமனைக்கு வந்த போலீசார் எங்கள் இருவரையும் விசாரித்து என்னிடம் வாக்குமூலம் பெற்றனர். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஆஜர் எதிரி தான் அடித்ததாக சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

4) தடவழி சம்மந்தமாக எனக்கும் எதிரிக்கும் இடையே ஏற்கனவே சிவில் நீதிமன்றத்தில் வழக்கு உள்ளது என்றால் ஆமாம். இரு வருடத்திற்கு முன்பிருந்தே எங்களுக்குள் வாய் த கராறு அடிக்கடி ஏற்படும் என்றால் ஆமாம். வழக்கு இருக்கும் போதே நான் அவருடைய உரிமையை பயன்படுத்தக்கூடாது என்று தடுத்து பிரச்சனை செய்தேன் என்றால் நான் பிரச்சனை செய்யவில்லை.

5) தடவழி சம்மந்தமாக வழக்கு இருக்கும் போது அவருடைய நிலம் என அவர் குழிதோண்டிக்கொண்டிருக்கும் போது நாங்கள் பிரச்சனை செய்தோம் என்றால் எங்கள் நிலத்தில் குழிதோண்டிக் கொண்டிருந்தார். வழக்கிற்காக முன்னுக்குப்பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வலிப்பு நோய் எனக்கு அடிக்கடி ஏற்படும் என்றால் ஆமாம். சிறுவயது முதலே எனக்கு வலிப்பு நோய் உள்ளது என்றால் ஆமாம்.

6) போலீசார் என்னை எங்கு வைத்து விசாரித்தனர் என்றால் வீட்டில் வைத்தும், மருத்துவமனையில் வைத்தும் விசாரித்தார்கள். எத்தனை நாட்கள் கழித்து விசாரித்தார்கள் என்றால் சம்பவதினத்தன்று மற்றும் 03.11.2022ம் தேதி விசாரித்தனர். சம்பவம் நடந்த போது எத்தனை பேர் அங்கு இருந்தனர் என்றால் 4, 5 பேர் இருந்தோம். அவர்கள் பெயர் தெரியுமா என்றால் நேசமணி, குழந்தைவேலு, ரங்கநாதன், போது, பெருமாள் ஆகியோர் இருந்தனர். அவர்கள்

என் உறவினரா என்றால் பக்கத்து வீட்டுக்காரர்கள். சம்பவம் பிற்பகல் 3 மணிக்கு நடந்தது. நான் மருத்துவமனைக்கு மாலை 4.30 மணிக்கு சென்றேன்.

7) 108 ஆம்புலன்ஸ் மூலமாக என் மனைவி என்னை அழைத்து சென்றார். போலீசார் மாலை 6 மணியளவில் விசாரணை செய்தனர். நான் சொல்வது போல் சொன்ன நேரத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் வலிப்பு நோய் காரணமாக கீழே விழுந்து காயம் ஏற்படுத்திக் கொண்டு தற்போது எதிரி ஏற்படுத்தியதாக பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி என் சித்தப்பா மகன் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் சிவில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

D.Myilswamy Digitally signed by D.Myilswamy Date: 2025.11.21 10:38:32 +0530

Judicial Magistrate No.II,
Mettur.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 327/2025**

**Prosecution witness : அ.சா. 2** **Date : 20.11.2025.**

| | |
|---|---|
| **Name : கோமதி** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் பொட்டனேரியில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 என் கணவர். எனக்கும் எதிரிக்கும் இடையே காம்போன்டு கட்டுவது சம்மந்தமாக சுமார் 2 வருடங்களாக பிரச்சனை நடந்தது. கடந்த 30.10.2022 ம் தேதி மாலை 3 மணியளவில் நான் வீட்டிலிருந்த போது எதிரி கடப்பாறையால் என் வீட்டுக்கு அருகில் குழிதோண்டிக் கொண்டிருந்தார். நான் சென்று எதிரியிடம் எதற்காக குழி தோண்டுகிறாய் என்று கேட்டதற்கு அப்படி தான் தோண்டுவேன் தெவிடியா கண்டார ஒலி என்று கெட்ட வார்த்தையால் திட்டி கடப்பாறையால் நெஞ்சின் மீது வைத்து கீழே தள்ளிவிட்டார்.

2) அ.சா.1 எதிரியிடம் கேட்ட போது அவர் வைத்திருந்த கடப்பாறையால் வயிற்றின் மீது அடித்து அ.சா.1 யை கீழே தள்ளினார் அதில் என் கணவருக்கு வலிப்பு வந்துவிட்டது. அதன் பிறகு நான் மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலம் அ.சா.1 யை அழைத்து சென்றேன். எதிரி அவர் வைத்திருந்த கடப்பாறையை காட்டி இன்றைக்கு நீ தப்பித்துக் கொண்டாய் என்றைக்கு இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று என்னையும், என் கணவரையும் கொலை மிரட்டல் விடுத்தார்.

3) எதிரி என்னை அடித்ததில் எனக்கு கழுத்து, இடுப்பு மற்றும் பின் தலையில் அடிப்பட்டது. நாங்கள் இருவரும் மேட்டூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தோம். மருத்துவமனைக்கு வந்த போலீசார் எங்கள் இருவரையும் விசாரித்து என் கணவரிடம் வாக்குமூலம் பெற்றனர். ஆஜர் எதிரி தான் அடித்ததாக சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

4) தடவழி சம்மந்தமாக எங்களுக்கும் எதிரிக்கும் இடையே ஏற்கனவே சிவில் நீதிமன்றத்தில் வழக்கு உள்ளது என்றால் ஆமாம். நிலம் சம்மந்தமாக பிரச்சனை இந்த பிரச்சனை ஏற்படுவதற்கு முன்பாக இருந்து வருகிறது என்றால் ஆமாம். எதிரி என் உறவினர் ஆவார். பக்கத்து வீட்டை சேர்ந்தவர். சிவில் நீதிமன்றத்தில் வழக்கிற்காக எதிரி மீது பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றும் எதிரிக்கும் இந்த வழக்கு சம்பவத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. போலீசார் என்னை என்று எங்கு வைத்து விசாரித்தனர் என்றால் மருத்துவமனையிலும், வீட்டிலும் வைத்து விசாரணை செய்தனர்.

5) சம்பவ சமயத்தில் யார் யார் இருந்தனர் என்றால் நான், என் கணவர் இருந்தோம். அக்கம் பக்கம் உள்ளவர்கள் இருந்தார்கள். அவர்கள் வீட்டுக்குள் இருந்தனரா என்றால் ஆமாம். சிவில் வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் எதிரி மீது இந்த பொய் புகாரை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. என் கணவர் வலிப்பு நோய் காரணமாக கீழே விழுந்து காயம் ஏற்படுத்திக் கொண்டார் என்றும் அவ்வாறு ஏற்பட்ட காயத்தை எதிரி ஏற்படுத்தினார் என்று பொய் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

D.Myilswamy Digitally signed by D.Myilswamy Date: 2025.11.21 10:38:41 +0530

Judicial Magistrate No.II,
Mettur.